**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM. RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**

**SC.No.93/2025 - PW- 1**

| | |
|---|---|
| Name | திரு. அஜித்குமார் |
| Husband/Father Name | ஜெயக்குமார் |
| Village /Area | பொன்னை |
| Taluk | காட்பாடி |
| Occupation | கேட்டரிங் வேலை |
| Age | 28 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 27.10.2025.

**(எதிரி ஆஜர்.).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். 13.01.2016 அன்று இரவு 07.00 மணியளவில் நானும் செல்வா மற்றும் ராஜா ஆகியோர்கள் ஆண்டி சமாதியிடம் நின்று பேசிக்கொண்டிருந்தோம். நாங்கள் சிரித்து பேசிக்கொண்டிருந்த போது ஆஜர் எதிரி டில்லிராஜ் என்பவர் அங்கு வந்தார். டில்லிராஜ் என்பவர் என்னை பார்த்து எதற்காக சிரிக்கீறிர்கள் என்று கேட்டார். அதற்கு நாங்கள் உன்னை பார்த்து சிரிக்கவில்லை என்று கூறினோம். அதற்கு அவர் அடிக்க வந்தார் அப்போது அங்கு உடன் இருந்த பாஸ்கர் மற்றும் பில்லா என்பவர்கள் எங்களை தடுத்து விட்டார்கள்.

அன்றிரவே 09.30 மணிக்கு பொன்னை குளக்கரை அருகே நானும் எனது நண்பர்களான செல்வா, ராஜா, பிரபாகரன் ஆகியோர்கள் மது அருந்திக்கொண்டிருந்தோம். அப்போது எதிரி டில்லிராஜ் என்பவர் அங்கு வந்தார். அவருடைய பாக்கெட்டில் ஆபரேஷன் செய்யும் பிளேடு

வைத்திருந்தது எங்களுக்கு தெரியாது. டில்லிராஜ் எங்களை பார்த்து எதற்கு என்னை பார்த்து சிரித்தீர்கள் என்று கேட்டு எங்களை பார்த்து ங்கோத்தா, ங்கொம்மா, தெவிடியா பைய்யா என்று அசிங்கமான வார்த்தைகளால் திட்டி அவர் என் கண்ணத்தில் ஒரு அடி அடித்தார். அதற்கு பதிலாக நானும் ஒரு அடி அடித்தேன். நீயே என்னை அடிக்கீறாயா என்று கேட்டு ஆபரேஷன் செய்யும் பிளேடை எடுத்து என் இடது பக்க கண்ணத்திலும், கழுத்திலும், மார்பு பகுதியிலும் கிழித்ததாவும் அதனால் ஏற்பட்ட தழும்புகளை சாட்சி நீதிமன்றத்தில் காண்பித்தார்.

பிறகு எங்களை தடுக்க வந்த பிரபாகரன் என்பரின் இடது கையில் அதே ஆபரேஷன் பிளேடால் கிழித்துவிட்டார். பிறகு என்னுடைய நண்பர்கள் ராஜா செல்வா ஆகியோர்கள் என்னை பொன்னை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் பிறகு சோளிங்கர் அரசு மருத்துவமனைக்கு சென்றார்கள் அங்கு எனக்கு முதலுதவு செய்துவிட்டு வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனைக்கு செல்லுமாறு கூறி அனுப்பி வைத்தார்கள்.

அப்போது மருத்துவரிடம் ஆபரேஷன் பிளேடால் கிழித்ததால் காயம் பட்டது என்று கூறியதற்கு போலீசார் வந்த பிறகு தான் சிகிச்சையை ஆரம்பிப்போம் என்று கூறினார்கள். சிகிச்சை அளிக்க மறுத்ததால் பிறகு இரு சக்கர வாகனத்தில் இருந்து கீழே விழுந்துவிட்டதாக பொய்யாக கூறினோம் அப்போது தான் சிகிச்சை அளிப்பார்கள் என்று அவ்வாறு கூறுனோம்.

மறுநாள் தான் போலீசார் விசாரித்த பிறகு எனக்கு சிகிச்சை அளித்தார்கள். நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் அது

**அதசாஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

நான் சம்பவ தினத்தின் போது கேட்டரிங் வேலை செய்துக்கொண்டிருந்தேன். எனக்கு கேட்டரிங் பயிற்சி காலை 08.00 மணி முதல் மதியம் 02.00 மணி வரை. அன்றைய தினம் பொங்கள் பண்டிகை என்பதால் கேட்டரிங் பயிற்சிக்கு செல்லவில்லை. நான் செல்வா, ராஜா, பிரபாகரன் ஆகியோர்கள் குளக்கரைக்கு இரவு 09.30 மணிக்கு சென்று மது அருந்தினோம். மது அருந்தியதால் போதை எனக்கு ஏறிவிட்டது என்று சொன்னால் இல்லை நான் அன்று அளவாக தான் குடித்தேன்.

குளக்கரைக்கும் ஆண்டி மடத்திற்கும் இடையே உள்ள தொலைவு அரை கி.மீ என்று சாட்சி முதலில் கூறிவிட்டு 500 மீட்டர் என்று கூறினார். குளக்கரையில் எந்தவிதமான மின்விளக்கும் அன்றைய தினத்தில் இல்லை என்று சொன்னால் சரிதான். குளத்தை சுற்றி நான்கு திசைகளிலும் எந்த விதமான விளக்குகளும் இல்லை என்று சொன்னால் சரிதான்.

குளக்கரைக்கு இரண்டு புறமும் வயல்வெளி உள்ளது என்று சொன்னால் சரிதான். நாங்கள் குளக்கரைக்கு செல்லும் போது வயல்வெளியில் இருந்தவர்கள் யாராவது பார்த்தார்களா என்றால் இல்லை நானும் செல்வாவும் ராஜாவும் இருசக்கர வாகனத்தில் சென்றோம்.

இருசக்கர வாகனத்தில் நாங்கள் சென்ற விவரத்தை போலீஸ் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். போலீஸ் விசாரணையில் நாங்கள் சென்ற வண்டியின் பதிவெண்ணை

கூறினேனா என்றால் அது சரியாக எனக்கு ஞாபகம் இல்லை.

போலீசார் எங்களை 16.01.2016 அன்று விசாரித்தார்கள். நான் அடிப்பட்டு முதன்முதலாக பொன்னையிள் உள்ள அரசு மருத்தவமனைக்கு சென்றோம். அந்த மருத்துவனையில் இருந்த செவிலியர் அங்கு எனக்கு சிகிச்சை அளிக்க முடியாது என்று கூறியதால் சோளிங்கர் அரசு மருத்துவமனைக்கு சென்றோம் என்ற விவரத்தை போலீஸ் விசாரணையில் கூறினேன்.

சோளிங்கர் மருத்துவமனையில் மருத்துவர் விசாரிக்கும் போது நான் பொன்னை பிரிட்ஜ்ஜில் வண்டியில் இருந்து இரவு 09.45 மணிக்கு வண்டி தடுமாறி வண்டியில் இருந்து கிழே விழுந்துவிட்டதாக கூறியுள்ளேன் என்று சொன்னால் அது குறித்து எனக்கு ஞாபகம் இல்லை. பொன்னை பிரிட்ஜ்க்கும் ஆண்டி மடத்திற்கும் இடையே உள்ள தொலைவு சுமார் 2 கி.மீ இருக்கும்.

மேற்படி விவரத்தை நான் போலீஸ் விசாரணையில் கூறினேனா என்றால் அது குறித்து எனக்கு ஞாபகம் இல்லை. போலீசார் என்னை அடுக்கம்பாறை மருத்துவமனைக்கு வந்து விசாரித்தார்கள். நான் போலீசாரிடம் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார் அப்போது தான் மயக்க நிலையில் இருந்தேன். சாட்சி தன்னை விசாரிக்கும் போது நான் மயக்க நிலையில் இல்லை தெளிவாக இருந்தேன் என்று கூறினார்.

காவல் துறை அதிகாரி மருத்துவமனைக்கு வரும் போது என்னுடன் என் அம்மா இருந்தார். போலீசார் மூக்கால் மணி நேரம் முதல் ஒரு மணிநேரம் வரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார். நான் பிரிட்ஜ்ஜில் விழுந்த விவரத்தையும் ஆரம்ப சுகாதர நிலையத்திற்கு சென்ற விவரத்தையும் போலீசார் விசாரணியல்

கூறினேனா என்றால் அது குறித்து எனக்கு ஞாபகம் இல்லை. என்னுடைய வாக்குமூலம் எத்தனை பக்கம் பதிவு செய்யப்பட்டது என்று நான் பார்க்கவில்லை. அந்த வாக்குமூலத்தில் எப்போது கையொப்பம் இட்டேன் என்றால் அன்றைய தினமே கையொப்பம் இட்டேன் எத்தனை கையொப்பம் இட்டேன் என்றால் அது குறித்து ஞாபகம் இல்லை.

என்னுடைய வாக்குமூலத்தை நான் படித்து பார்த்து தான் கையொப்பம் இட்டேன். அதன் பிறகு எப்போது போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றால் என்னை மருத்துவமனையில் சிகிச்சை பெறும் போது 10 நாட்கள் கழித்து மீண்டும் விசாரித்தார்கள். என்னை விசாரித்த போலீஸ் அதிகாரி பதவி பற்றி எனக்கு தெரியாது. அப்போது என்னிடம் கைபொப்பம் ஏதாவது பெற்றார்களான என்றால் அது குறித்து எனக்கு ஞாபகம் இல்லை.

இரண்டாவது முறை என்னை விசாரித்ததை போலீசார் எழுதிக்கொண்டார்கள். அது எத்தனை பக்கங்கள் இருக்கும் என்றால் 5 – 6 பக்கங்கள் இருக்கும். அந்த வாக்குமூலம் கைப்பட எழுதப்பட்டது. அதில் நான் கையொப்பம் இட்டேனா என்றால் அதில் ஓரே பக்கம் மட்டும் தான் கையொப்பம் இட்டேன். இரண்டாவது முறை எதற்காக என்னை விசாரித்தார்கள் என்றால் என்னுடன் செல்வா, ராஜா, பிரபாகரன் ஆகியோர்களுடன் சேர்த்து விசாரித்தார்கள்.

நான் மதுபோதைக்கு அடிமையானவர் என்றும் குடிக்காமல் எனக்கு தூக்கம் வராது என்றும் அன்றைய தினம் மது அருந்திவிட்டு இரு சக்கர வாகனத்தில் சென்று நானாக காயம் ஏற்படுத்திக்கொண்டேன் என்றும் எதிரியின் மீது உள்ள விரோதத்தின் பேரில் பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதனால்

தான் மருத்துவரிடம் நான் இரு சக்கர வானத்தில் கிழே விழுந்துவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. முதலுதவி செய்யததால் தான் அவ்வாறு கூறினேன் .

நான் சம்பவ தினத்தன்று புளூ கலர் சட்டை அணிந்திருந்தேன். என்னை சட்டை முழுவதும் இரத்த கரை படிந்தது. போலீசாரிடம் இரத்தம் படிந்த சட்டையை ஒப்படைத்தேனா என்றால் அது எனக்கு யோசனையில் வரவில்லை. நான் கூறுவது போல் சம்பவம் நடந்திருந்தால் போலீசார் என்னுடைய இரத்த கரை படிந்த சட்டையை கைப்பற்றியிருப்பார்கள் என்றும் நான் வண்டியில் இருந்து விழுந்து காயம் ஏற்படுத்திக்கொண்டதால் தான் அவ்வாறு இரத்த கரை படிந்த சட்டைய கைப்பற்றவில்லை என்று சொன்னால் சரியல்ல.

என்னுடைய இரத்தக் கரை படிந்த சட்டையை என் அம்மாவிடம் கொடுத்துவிட்டேன். நான் கூறுவது போல் சம்பவ இடத்திற்கு ராஜா, செல்வா, பிரபாகரன் வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் கூறுவது போல் சம்பவமே நடைபெறவில்லை என்றும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.10.27 17:55:58 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.